


# வைத்ய சந்திரிகை.

தமிழ்நாடு ஆயுர்வேத மஹா மண்டலத்தின் மாதப் பத்ரிகை

Vol. 9 · December, 1947 · No. 12

**ஆசிரியர் :**

V. B. நடராஜ சாஸ்த்ரீ, ஆயுர்வேதாசார்ய.

*வைத்ய விசாரத, வைத்யவாசஸ்பதி.*

**ப்ரகாசகர் :** பண்டித ஸ்ரீ. மெ. ஸௌந்தரராஜாசார்யர்.

வருஷச்சந்த ரு. 3—0—0

ஆச்சரியம்! ஸ்தாபிதம். 1901 அபூர்வம்!!

# "ஆள்வாரின் குண்டலினி"

என்னும் அவுடதம் யானைக்காலுக்கு மிகவும் பெயர் பெற்றது. பீடித ஜ்வரம், நெரி கட்டுதல் விம்மின வீக்கம் இவைகளைப் போக்கி பூர்ண குணம் உண்டாக்கும், 1 மீ உபயோகத்தால் சுகம் கொடுக்கும். இன்னும் வெண் குஷ்டம், குஷ்டம், நீண்ட நாள்களாயுள்ள சர்மரோகங்களுக்கும் நம்மிடம் ஏற்ற அவுடதம் கிடைக்கும்

இதர தேவைக்கும் எழுதுக.

ஆள்வார் மெடிகல் ஹால்,
தபால் பெட்டி நெ. 615. மயிலாப்பூர், P. O.
மதருஸ். 4.

வைத்திய பண்டித K. M. ஆள்வார் ஜகத்ப்ரஸித்தர்.

# ❀ ஸ்திரீகளுக்கு ❀

## சில பிரத்யேக மருந்துகள்.

ஜீவநீ: கர்ப்பிணிகளுக்கு மிகச் சிறந்த டானிக்கு.

ஸூஷவீ: பிரஸவித்தது முதல் 11 நாட்களுக்கு பரம உபயோகமானது.

ஸௌபாக்கியரஸாயனம்: பிரஸவத்திற்குப் பிறகு உடலுறுதிக்கு அவசியமான லேகியம்.


பயஸ்யா: தாயாரிடம் பாலை மிகுதியாய் வளர்க்கும் திவ்ய ரஸாயனம்.

எங்கும் கிடைக்கும்.

அல்லது நேரில்:
ஆத்ரேய ஆயுர்வேதிக் ஒர்க்ஸ்,
தென்னூர் ரோடு, திருச்சிறுப்பள்ளி.

தந்தி: "ATREYA"

# MODEL PHARMACY,
## BEZWADA.




MP's மாடல் பார்மஸியின்
கைகண்ட ஒளஷதங்கள்

**பிளட்-டோன்:** இரத்த வீர்ய விருத்திக்கும் இதர கோளாறுகளுக்கும் இன்றியமையாத ஓர் பொது டானிக்

**காப்பீன்ஸ்:** இருமல் ஜலதோஷம் இவைகளுக்கு ஓர் கைகண்ட மருந்து

**ம்லேனல்:** மலேரியா ஜுரத்திற்கு கொய்னா சம்பந்தமில்லாத சிறந்த ஒளஷதம்

**மென்ஸால்:** ஸ்திரீகளின் ஆரோக்கியத்திற்கு இன்றியமையாதது

**சிசுடோன்:** குழந்தைகள் தேக வளர்ச்சிக்கு ஓர் சஞ்சீவி

**மில்கோபின்:** தாய்மார்களுக்கு குழந்தைகளுக்குத் தேவையான தாய்ப்பாலை அதிகரிக்கவல்ல சிறந்த ஒளஷதம்

மாடல் பார்மஸி, பெஜவாடா.

பூர்ண விற்பனை உரிமையாளர்:

**ராஜா ராம்சந்தர் & கம்பெனி,**

***520. திருவல்லிக்கேணி ஹைரோட், மதராஸ்-5.***

Sole Distributors: RAJA RAMCHANDER & Co.,
520, High Road Triplicane, Madras—5

**Stocks available from;**

Appah & Co. Esplanade, Madras.

South Indian Medical Stores Ltd., Raja Street, Coimbatore.

The Trichy Ayurvedic Union Ltd.. Chinnakadai Street, Trichinopoly,

Sivanandam & Co. 7, East Avani moolai Street, Madura.

The Erode Medical Supplies Ltd., Erode.

Kandan Drug Stores, Mettupalyam.

General Stores Canteen, Nursing Home, Dharapuram.

Messrs. C. Arumugam Pillai & Sons Shop-keepers & General Merchants, Dindigal.

Chandra Pharmacy, Rama Nilayam, North main Street, Pudukkottah.

The Ideal Agencies, Singh Medical Hall. Chekkalai Road, Karaikudi.

உ

ஸ்ரீ தந்வந்தரயே நம:

# நமது பத்திரிகை.

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தினுடைய லக்ஷியங்களில் பத்திரிகை நடத்தல் ஒரு பிரதானமானது. மண்டலத்தினல் சொந்தப் பத்திரிகை நடத்த ஆரம்பிக்கப்பட்டு இந்த இதழுடன் இரண்டு வருஷங்கள் பூர்த்தியாகின்றன. பத்ரிகை எல்லாத் துறைகளிலும் பரிபூரணமாக ஆகாவிடினும் சென்ற 24 மாதங்களில் மாதத்திற்கு மாதம் கிரமமாய் பல வழிகளில் அபிவிருத்தியாகிக் கொண்டிருக்கிறதென்பது வாசக நண்பர்களுக்குப் பிரத்யக்ஷமாயிருக்கும். இவ்வளவு தூரம் அபிவிருத்தியானதற்கு வைத்தியர்களுடையவும் தேசீய வைத்திய கலை அபிமானிகளான பொதுஜனங்களுடையவும் அன்பும் ஆதரவுமே காரணம்.

பத்திரிகையினல் அடையவேண்டிய பயன்களைப் பெறவேண்டுமாகில் பத்திரிகையில் செய்யவேண்டிய அபிவிருத்திக் கார்யங்கள் இன்னும் பல பல இருக்கின்றன. அதற்கு முதலாவது பத்திரிகையின் பக்கங்கள் அதிகமாக்கப் படவேண்டும். இப்போது சராசரி 4 பாரங்கள்தான் போடப் படுகின்றன. இது இரட்டித்தால் நல்லது. குறைந்தபக்ஷம் ஒன்றரைப் பங்காவது ஆகவேண்டும். மண்டலத்திற்கு தற்சமயமுள்ள சந்தாதாரர்களிடமிருந்து சேரும் பொருளாதார நிலையில் பத்திரிகையை இந்த ஆகிருதியில் நடத்துவதற்கே ஸாத்தியமாகாமல் மனஸ்விகளான சில வைத்தியர்களுடைய மாதாந்தர தருமத்தால் இப்பொழுது பத்திரிகை நடந்துகொண்டிருக்கிறது. ஆதலால் வைத்திய நண்பர்களில் ஒவ்வொருவரும் பத்திரிகை இவ்வளவிலாவது தொடர்ந்து நடந்து வந்தால் போதுமென்று கருதினலும் சரி, மேற்கொண்டு வளரவேண்டுமென்று கருதினலும் சரி, பத்திரிகையினல் ஆகும் பணச் செலவு பாரத்தை இனியும் ஓரளவு அதிகமாக பொறுப்புடன் ஏற்றுக் கொண்டால்தான் பத்திரிகையை அதிக ஆயாஸமின்றி நடத்த ஸாத்தியமாகும். இப்போது மண்டலத்தின் வருஷ சந்தா ரூ. 3—0—0. இதை உயர்த்தினல் ஒருவாறு அச்சுச் செலவு விஷயத்தில் ஆறுதலேற்படமுடியும். சந்தாவை

அதிகமாக்காவிடில் இப்போது பிரதிமாதமும் ரூபாய் 10 தருமம் செலுத்திவரும் சில அன்பர்கள் போல் இன்னும் 10 அன்பர்களாவது ஒன்று சேரவேண்டும். அல்லது இப்போதுள்ள வைத்ய அங்கத்தினர் ஒவ்வொருவரும் வருஷத்திற்கு குறைந்தது இரண்டு புதிய சந்தாதாரர்களை அடுத்த ஒருமாதத்திற்குள் சேர்த்து விட வேண்டும். இவைகளில் ஏதாவது ஒருவழியை உடனே பூர்த்தி செய்யாவிடில் பத்திரிகையைத் தொடர்ந்து நடத்துவது மண்டலத்தினால் இயலாத கார்யமாகிவிடும். சில குறிப்பிட்ட அபிமானிகளையே நிரந்தரமாய் தொந்தரவு செய்வதும் உசிதமில்லை. தேசீய வைத்தியர்களுடைய சங்கத்தின் சக்தியை வளர்ப்பதற்கும் சாஸ்திர சர்ச்சை செய்வதற்கும் பத்திரிகை இன்றியமையாத கருவியாகும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? ஆதலால் வைத்திய சந்திரிகை பத்திரிகையை இனி மேல்கொண்டு இந்த அளவிலாது தொடர்ந்து நடத்தவும், அபிவிருத்தி செய்யவும் தேசீய வைத்தியர்கள் அவரவர்களுடைய அன்பையும் ஆதரவையும் உள்ளுக்குள்ளேயே வைத்துக் கொண்டிருக்காமல் விசேஷமாய் பொருளுதவி மூலமாகவும் அநுஷ்டித்துக் காட்டிக்கொண்டிருக்க வேண்டுமென்று திரும்பத் திரும்ப வேண்டப் படுகிறார்கள்.

# அறிவிப்பு.

அச்சுக் கூடங்களில் ஏற்பட்டிருக்கும் தொழிலாளர்களின் வேலை நிறுத்த நெருக்கடி காரணமாக பத்திரிகை குறைந்த அளவில் வெளி வருகிறது. சரியான நிலைமை ஏற்பட்ட வுடன் பத்திரிகையும் அதிகமான அளவில் வெளியாகும்.

## தயை செய்து :: :: ::

:: :: தங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிவியுங்கள்.

(1) பொதுவில் வைத்திய சந்திரிகையில் தொகுக்கப்படும் விஷயங்களில் எதெது எப்படி எப்படி இருப்பது தங்களுக்கும் பொதுவாய் வைத்திய உலகுக்கும் உகந்ததாயும் உபகாரமாயும் இருக்குமென்று தோன்றுகிறது?

(2) வைத்திய சாஸ்திரம் பயிலாத பொதுமக்களுக்கும் எளிதில் விளங்கும்படியாகவும், பயன்பெறக் கூடியதாகவும் உள்ள சில விஷயங்களை ஒதுக்கி வைத்ய சந்திரிகையில் பிரசுரம் செய்வது நல்லதா? அல்லது வைத்தியம் பயின்று தொழில் புரி பவருக்கு மட்டும் உபயுக்தமான விஷயங்களையும் சர்ச்சைகளை யுமே சந்திரிகையில் பிரசுரம் செய்வது நல்லதா?

(3) ஸம்ஸ்கிருதத்திலோ அந்நிய பாஷையிலேயோ இருக் கும் வைத்தியக் கிரந்தங்களை அப்படியே தமிழில் மொழிபெயர் த்து சிறுகச் சிறுக சந்திரிகையுடன் வெளியிடுவதால் பொது வைத்தியர்களுக்கு அதிகப் பிரயோஜனமாகுமா?

(4) அல்லது— பிராசீனக் கிரந்தங்களில் ஒன்றில் இருக் கும் விஷயங்களே மற்றக் கிரந்தங்களிலும் அநேகமாய் திரும்பத் திரும்பக் கூறப்பட்டிருக்கின்றபடியால் எல்லாக் கிரந்தங்களையும் மொழிபெயர்ப்பதில் அதிகம் பிரயோஜனமேற்படாது, நிதானம், சிகித்ஸை, பேஷஜகல்பம், ரஸாயனம் போன்று விஷயவாரி யாகப் பிரித்துப் புதிதாய் தமிழில் கிரந்தங்கள் எழுதி வெளியிடு வதுதான் அதிகப் பிரயோஜனம் என்று நினைக்கிறீர்களா?

(5) வைத்திய சந்திரிகைக்கு ஸம்ஸ்க்ருதாநுபந்த ரூபமாக ஒரு சிறிய பகுதி சமயம் நேர்ந்தபோது சேர்த்து இதில் ஆயுர் வேத சாஸ்திரீயமான சில விசாரங்கள் ஸம்ஸ்கிருத பாஷையில் செய்துகொண்டிருத்தலில் தங்களுடைய அபிப்பிராயமென்ன?

தாங்கள் தங்கள் நண்பர்களையும் கலந்து ஆலோசித்து இந்த விஷயங்களிலும், மற்றும் சந்திரிகையின் அபிவிருத்தித் துறை களிலும் தங்களுடைய அபிப்பிராயங்களை தயை செய்து உடனே ஆசிரியருக்குத் தெரிவிக்கப் பிரார்த்திக்கப்படுகிறது.

## भल्लातकादि दन्तचूर्णम् ।

आढक्या दळमध्यगान् सुमतिमान्भल्लातकान् मृन्मये
पात्रे स्थाप्य विधाय पावकमधः प्रज्वालयेद्युक्तितः ।
तन्मस्याऽखिलदन्तघर्षणमिदं कुर्वन्तु लोकाः सदा
योगोऽयं किल दन्तरोगमदभृन्मत्तेभकण्ठीरवः ॥

—(वैद्यामृतम्)

### பொருள்.

துவரம்பருப்பு 20 தோலா, கண்டங்களாக்கிய சேங்கொட்டை 10 தோலா. ஒரு மண் கலயத்தில் முதலில் துவரம்பருப்பு 10 தோலா போட்டு மத்தியில் சேங்கொட்டைக் கண்டங்களைப் போட்டு அதன்மேல் துவரம்பருப்பு 10 தோலாவைப் போடவும். வாய் சீலேமண் செய்து காயவைத்து அடுப்பிலேற்றி சுமார் 3 மணி நேரம் காடாக்னியில் எறிக்கவும். அல்லது விராட்டியில் அர்த்தகஜ புடம் போடவும். பருப்பும் சேங்கொட்டையும் நன்ருய் கருகி நிற்கவேண்டும். (अन्तर्धूमक्षारपाकः) இப்பொடியை எடுத்து கல்வத்தில் நன்ருய் அரைத்து சீசாவில் பத்திரப் படுத்துக.

இந்தச் சூர்ணத்திஞல் பல்துலக்கிஞல் பல் சீழ்வடிதல், குத்துவலி முதலிய பல் பிணிகள் சீக்கிரத்தில் சமனமாகும்.

இந்த சூர்ணத்துடன் மேலும் கூடக் கர்பூரம், வசம்பு, வாஸனைக் கோஷ்டம், அக்கிராகாரம் பிரத்யேகம் ஸமனிடை சூர்ணித்து சேர்த்து உபயோகித்தால் விசேஷக் குணம் கிடைக்கும். கைகண்டமுறை.

— (यादवीयः सिद्धयोगसंग्रहः)

---

### செய்திக் குறிப்பு

**29—12—47-ல் சென்னையில் நமது மண்டலத்தின் கமிட்டிக் கூட்டம் நடைபெற்றது. அடுத்த ஸம்மேளனம் கும்பகோணத்தில் 1948 ஏப்ரலில் நடைபெறும். மற்ற விவரங்கள் அடுத்த சந்திரிகையில் பிரகாசமாகும்.**

# வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹா மண்டலத்தின்
மாதப் பத்திரிகை.

இங்கிலீஷ் மாதம் முதல் வாரத்தில் வெளியாகும்.

**வருஷச் சந்தா ரூ. 3-0-0**

பத்திரிகைக்கும், மண்டலத்திற்கும் சந்தா ஸம்பந்தமான வர்ஷாரம்பம் ஜனவரி முதல் டிஸம்பர் முடிய (Calender year) 1948-ம் வருஷத்திய சந்தாவை 1948 ஜனவரி 7-தேதிக்குள் அவசியம் அநுப்பி விடப் பிரார்த்திக்கப்படுகிறது.

சந்தா, விளம்பர விஷயங்கள் அனுப்பவேண்டிய விலாஸம் :—

ஸ்ரீ A. ராகவராவ், A. L. I. M.
**உபகார்யதர்சீ, தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்,**
**17. சின்னக்கடைத்தெரு, தெப்பக்குளம் போஸ்டு,**
**திருச்சிறுப்பள்ளி.**

சந்தாதாரரின் விலாஸம் மாறுதல், பிரதி இங்கிலீஷ் மாதம் 15-ந் தேதிக்குள் சந்திரிகை கிடைக்காவிடிலும் மேற்படி விலாஸத்திற்கு உடனே தெரிவிக்கவும்.

---

ஸ்ரீ V. B. நடராஜ சாஸ்திரீ, ஆயுர்வேதாசார்ய,
**ஆசிரியர்: வைத்திய சந்திரிகா,**
**ஆத்ரேயாசிரமம், தென்னூர் ரோடு, திருச்சிறுப்பள்ளி.**

என்ற விலாஸத்திற்கு சந்திரிகையில் பிரசுரம் செய்யவேண்டிய கட்டுரைகள், செய்திக் குறிப்புகள், ஸந்தேஹங்கள், பதில்கள், சர்ச்சைகள், சிகித்ஸைக் குறிப்புகள், (Case Sheets) விமர்சத்திற்குப் புத்தகங்கள், பதில் பத்திரிகைகள் இவை போன்றவை யெல்லாம் அனுப்பப்படவேண்டும்.

குறிப்பு :— சந்திரிகையில் பிரகாசமாகும் இதரர்களுடைய கட்டுரைகளில் காணும் மதபேதங்களுக்கு ஆசிரியர் பொறுப்பாளி யல்ல. பிரசுரத்திற்கு அநுப்பவேண்டிய விஷயங்கள் தெளிவான எழுத்தில் காகிதத்தில் ஒருபக்கத்தில் கொஞ்சம் இடம் (Margin) விட்டு எழுதப்படவேண்டும். விஷயத்தைப் பிரசுரிக்க காலம், இடம், அளவு முதலியவைகளில் ஆசிரியருக்குப் பூர்ண ஸ்வாதந்தர்யம் உண்டு.

---

# :: சிசு பரிபாலனம் ::

*[வைத்திய வாசஸ்பதி, ஸ்ரீ P. S. ராமசர்மா. கரூர்.]*

(முன் மாதத் தொடர்ச்சி)

சிசு பரிபாலனத்தின் முதல் வேலை சிசு மரணத்தைத் தவிர்ப்பது எவ்விதம் என்று ஆராய்வோம். நமது தேசத்தில் சிசு மரண விகிதம் நாளுக்கு நாள் அதிகமாவதாகத் தான் தெரிகிறது. உதாரணமாக சென்ற சில வருஷங்களில் ஒரு வருஷத்திய சென்னை பொது ஜன சுகாதார இலாகா அதிகாரியின் அறிக்கை (Madras Public Health Director's Report) பின் வருமாறு கூறுகின்றது. "The number of Infantile deaths increased in the year from 283930 to 297474. The heavy toll taken by death is evident from the fact that Infantile deaths account for more than a quarter of the total number of deaths in the Presidency" இவ்விதமான அறிக்கைகளைப் படிப்பதிலிருந்து பொதுஜன சுகாதார இலாகாவினுல் எவ்வளவு தூரம் சிசு மரணத்தைக் குறைக்க முடியாமல் போயிருக்கிறது என்பது தெளிவாகிறது.

மேற்கண்ட நிலைமையின் காரணங்களை ஆராயப்புகும் பொழுது முதலாவதாக ஜனங்களுக்கு கர்பத்திலும் குழந்தையைப் பராமரிக்கத் தேவையான சாஸ்திர அறிவு இல்லாமையேயாகும் என்று புலப்படுகிறது. அடுத்த படியாக நமது தேசத்தில் பொதுவாக ஏற்பட்டிருக்கும் ஏழ்மைத் தனத்தால் போதுமான சத்துடன் கூடிய ஆகார வகைகளை உபயோகிக்க முடியாமலும் சுகாதாரத்திற்கு ஒத்த வாழ்க்கை நடத்த முடியாமலும் இருப்பதாகும். மூன்றுவதாக கர்ப காலத்திலும் பிரஸவத்திலும் மருத்துவம் செய்யும் தாதிகளும் வைத்தியர்களும் சாஸ்திர விதிப்படி பிர

ஸவ விதிகளைத் தெரிந்து கொள்ளாமல் முரட்டுத்தனமாக நினைத்தபடி நடந்து கொள்வதனாலும், கர்பத்திலும் பிரஸவத்திலும் ஏராளமான சிசு மரணங்கள் நேருகின்றன.

தாதிகளுக்காக தற்காலத்தில் மேல்நாட்டு முறைப்படி அரசாங்கத்தாரால் பயிற்சி அளிக்கப்படுகிறது. இவர்கள் நமது தேசத்து (மருத்துவத்தில்) பிரசூதி தந்திரத்தில் (Obstetrics) ஞானம் சிறிதும் இல்லாதவர்களாகவே இருக்கிறார்கள். மேனாட்டு முறையில் பிரசூதி தந்திரத்தை நோய் ஏற்படாமல் பாதுகாக்கும் வழியின் ஓர் கிளையாக சமீபகாலத்தில் தான் ஒப்புக் கொள்ளப் பட்டிருக்கிறது. ஆனால் இப்பொழுது எல்லாவிதமான விரிவான சுகாதார திட்டங்களிலும் இதற்கு முக்கியத்துவம் கொடுக்கப் படுகிறது. பிரஸவத்திலிருந்து ஏற்படும் ஏராளமான அனாரோக்கியத்தை அனுசரித்து பொதுஜனங்களுக்கும் வைத்தியர்களுக்கும் இன்னோக்கம் ஏற்படுவது நியாயமானதே. இருந்தபோதிலும் மேனாட்டு முறையைத் தழுவியே இத்திட்டங்கள் எல்லாம் ஏற்படுத்தப் படுவதாலும் இதில் கலந்துகொள்ளும் வைத்தியர்களுக்கும் தாதிகளுக்கும் தேசீய முறைகளில் பயிற்சி தேவையாகக் கருதப் பட்டாலும் அநேக உயர்ந்த வஸ்துக்களை உபயோகிக்க தகுந்த சந்தர்ப்பம் ஏற்பட்டும் வீணாகப் போய் விடுகிறது. உதாரணமாக, பிள்ளைவளர்ப்பான் என்று தலைமுறை தலைமுறையாக உபயோகப் படுத்திவரும் வசம்பின் குணம் கூட இவர்களுக்குத் தெரிவதில்லை என்பது எவ்வளவு வருந்தத் தக்கது. நமது தேசத்து நிலைமையை அனுசரித்து குழந்தைக்கு பிரஸவித்த முதல் எந்த ஆகாரம் உசிதமானது தாய்க்கு எந்த மருந்து மிகவும் சிலாக்கியமானது என்ற அறிவில்லாததால் பேடண்டு மருந்துகளையும் க்ளூகோஸ் ஜலம், சர்க்கரை ஜலம், எர்கட் (Ergot) மிக்சர் போன்றவைகளையே சரணாகதி யடைகிறார்கள். தசமூலாரிஷ்டம், கண்டார்த்ரகலேகியம், சௌபாக்கிய சுண்டி, பிராம்மீ, சங்கபுஷ்பீ, வசம்பு முதலிய பல உயர்ந்த ரஸாயனங்களைக் குறித்து இவர்களுக்குச் சிறிதளவும் ஞானமில்லாததால் நமது ஆரோக்யத்தை முற்றிலும் நாம் இழக்க நேருகிறது.

இளம் பருவத்தில் தேவையான போஷணையில்லாமல் முற்றின உடம்பை எவ்வளவு போஷித்த போதிலும் எதிர்பார்த்தபடி பலன் கிடைப்பது மிகவும் கஷ்டம். "தண்ணீரில் விளைந்த நெல்லும் கண்ணீரில் விளைந்த வித்தையும் காலத்தில் பலனைத்தரும்" என்று ஓர் மலையாளக்கவி கூறியபடி, இளம் பயிருக்குத் தேவையான ஜலம் பாய்ச்சப்படாவிட்டாலும், நல்ல ஆசானிடம் தொண்டு செய்து அடிபட்டு கண் ஜலம் விட்டு உழைத்துப் பாடம் படிக்காவிட்டாலும், பூர்ண பலனை எதிர்பார்ப்பது தகுதியாகாது. ஆகையால் கர்பத்திலும் இளம் பருவத்திலும் தகுதியான முறைகளைக் கையாளாமல் பிந்திய வயதில் ஆரோக்கியக் குறைவைக்கண்டு வருந்துவதினாலும், சிசு மரணத்திற்காகக் கவலைப் படுவதினாலும் என்ன பலன்?

கர்பத்திலிருந்தே பிறக்கும் சிசுவைப் பாதுகாக்கத் தகுந்த முயற்சிகள் எடுத்துக்கொண்டு வரவேண்டும் என்பதை சுசுருதத்தில்— तदा प्रभृति व्यवायं व्यायाममतितर्पणं अतिकर्शनं दिवास्वप्नं रात्रिजागरणं शोकं यानारोहणं भयमुत्कुटुकासनं एकान्ततः स्नेहादिक्रियां शोणितमोक्षणं चाकाले वेगविधारणं च न सेवेत। दोषाभिघातैर्गर्भिण्या यो यो भागः प्रपीड्यते स स भागः शिशोस्तस्य गर्भस्थस्य प्रपीड्यते। இது போன்ற பல விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

மேனாட்டுத் தாதிகள் மருத்துவம் செய்யும் இடங்களில் யாராவது பழைய பாட்டிமார்கள் இருந்து சாஸ்திர பரிசயம் இல்லாமலிருந்த போதிலும் அனுபவ முறைகளை எடுத்துரைத்தாலும் அவர்களுடைய சொல் கிழத்தின் பேச்சாகவே தான் இருந்துவிடுகிறது. இந்தமாதிரி மருத்துவ வசதிகள் தகுதியாக அமையப்படாமல் இருப்பதோடு மேனாட்டு வைத்தியர்களைத்தான் இத் தாதிகள் உதவிக்குத் தேடுகிறார்கள் என்பது இனம் இனத்தைச் சேருவதால் இயற்கைக்குப் பொருத்தமானதே. இந்நிலைமையில் நமது தேசிய முறைகள் கஸ்தூரியாகவும் புனுகாகவும் கோரோசனையாகவும் இருந்து என்ன பயன்? ஓர் ஏழையின் வசம் எவ்வளவு உயர்ந்த சாமான் இருந்தா

லும் அதற்கு மதிப்பு மிகவும் குறைவு. ஓர் அரசனிடம் எவ்வளவு மட்டமான பொருள் இருந்தாலும் அது பெரிதாக மதிக்கப்படுகிறது. ஒரு அரசனுடைய நெற்றியில் சேற்றுத்துளி தெரித்தாலும் பார்ப்பவர்கள் அதை ஜவ்வாதுப் பொட்டாகவே மதிப்பார்கள். தகுதியற்றவன் கஸ்தூரீ திலகம் வைத்துக் கொண்டிருந்தாலும் அவன் நெற்றியில் சாக்கடைத் தண்ணீரை பன்றி வாலில் தோய்த்து வீசிவிட்டதா என்று ஏளனம் செய்வார்கள். வைத்தியர் உயர்ந்த மாத்திரை ஒன்று கொடுத்திருக்கிறார், பொறுத்து தாங்கள் மருந்து கொடுக்கலாம் என்று சமயம் ஓர் பிரசித்திபெற்ற ஆங்கில வைத்தியரிடம் யாளியைச் சேர்ந்தவர் சொன்னதற்கு, நேர்வாளம் ரையா வைகுண்ட யாத்திரையா என்று அந்த ஆ வைத்தியர் கேட்டார். தேசீய வைத்தியத்தில் எ உயர்ந்த சாமான் இருந்தாலும் ஏளனம் செய்யத்தக் என்ற மனோபாவம்தான் அவரை இவ்விதம் கே தூண்டியது.

ஆலோசனை செய்யாமலும் குணதோஷங்களை அ மலும் குறைகூறும் சுபாவம் இவர்களுக்கு ஏன் இவ் நாளுக்குநாள் அபிவிருத்தியாகிறது என்பதைப்பற்றி ரிக்கும் பொழுது பல காரணங்கள் தோன்றுகின் நாட்டு வைத்தியம் நல்ல நிலைமைக்கு வந்துவிட் வியாதி, மரணம் முதலியவை குறைந்துபோய் வி என்ற அச்சமும் அவர்களுக்கு இருக்கலாம்.

(தொடரும்

# வைத்தியர்களுக்கு

## :: முக்கியமான அறிவிப்பு ::

***

தங்களுடைய

அரிய நேரத்தை

மருந்துகள் தயார் செய்வதில்

செலவழிக்காமல் தங்களுக்காக மிகுந்த

சாஸ்திரப் பயிற்சி பெற்ற வைத்தியர்களைக்

கொண்டு சாஸ்திர முறைப்படி உயர்ந்த

சரக்குகளை சரியாகச் சேர்த்து

மருந்துகளைத் தயார்செய்து

வைத்திருக்கும்

***

**திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் லிட்.,**

**சின்னக் கடைத் தெரு, தெப்பக்குளம், P. O. திருச்சி.**

இடமிருந்து பெற்றுக் கொள்ளவும்.

---

*N. B:*— வைத்தியர்களுக்கு மிகக் குறைந்த விலைக்கு

மருந்துகள் சப்ளை செய்யப்படும்.

வைத்ய வாசஸ்பதி பண்டிட்

P. S. ராமசர்மா அவர்களின்

நீண்ட கால பரீக்ஷை அனுபவங்களினுல் கண்டு பிடிக்கப்பட்ட
கைகண்ட பலனளிக்கும்

# "சக்தி ஸஞ்சீவி"

(Regd.)

குழந்தைகளுடைய ஈரல் குலைக் கட்டிகளை எந்நிலைமையிலும்
போக்குவதிலும் வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்,
எங்கும் கிடைக்கும்.

தயாரிப்பவர்:—

ஸ்ரீ சக்தி விலாஸ வைத்யசாலா,
கரூர், S. I. Ry.

Published by Pandit S. M. Sundararajacharya for Tamil Nad Ayurveda Maha Mandalam & Printed at the Sri Vilasam Press, Srirangam.